கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.74 /2014

நாள். 03.06.2024 வா.சா.1 – திரு.மகேஸ்வரன்

த/பெ - திரு.ராமகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்கள் சொந்த ஊர் எது என்றால் வள்ளியூர் ஆகும். நீங்கள் வழக்கறிஞரிடம் எழுத்தராக பணி புரிந்து வருகிறீர்கள் என்றால் சரி தான். வழக்கில் 2 தபசில் சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி தான். 1 வது தபசில் சொத்தில் புல எண்.611 ல் 12 ஏக்கர் 92 செண்டும் புல எண். 612 ல் 13 ஏக்கர் 10 செண்டும் என 26 ஏக்கர் 2 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். 2 ம் தபசில் சொத்தாக புல எண். 611/1 ல் 10 ஏக்கர் 7 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

2) உங்கள் கட்சிப்படி 1 ம் தபசில் சொத்து முழுவதும் இராமலிங்கம் பிள்ளை மற்றும் சண்முகம் பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறீர்கள் என்றால் சரி தான். அதில் நீங்கள் இராமலிங்கம் பிள்ளைக்கு 2/3 பங்கும், சண்முகம் பிள்ளைக்கு 1/3 பங்கும் என கட்சி செய்து வருகிறீர்கள் என்றால் சரி தான். அதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்த நபர் சொன்னார்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2024.06.03 15:08:20 +0530

3) 1ம் தபசில் சொத்து சம்மந்தமமாக மேற்படி ராமலிங்கம் பிள்ளை, சண்முகம் பிள்ளை பெயர்களில் பத்திரம் எதுவும் பார்த்துள்ளீர்களா என்றால் பாரக்,கவில்லை. ராமலிங்கம் பிள்ளை அவருக்கு பாத்தியப்பட்ட பாகத்தை பொறுத்து ஏதேனும் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. ராமலிங்கம் பிள்ளைக்கு சிவசுப்பிரமணிய பிள்ளை, காந்திமதிநாத பிள்ளை என 2 ஆண்மக்கள் என முதல் விசாரணையில் தெரிவித்துள்ளீர்கள். அதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளீர்களா என்றால் ஜெராக்ஸை ஆவணத்தை பார்த்துள்ளேன்.

4) சிவசுப்பிரமணிய பிள்ளை, காந்திமதிநாத பிள்ளை ஆகிய இருவரும் சேர்ந்து 19.05.1931 ல் வா.சா.ஆ.1ன் படி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரி தான். காந்,திமதி நாத பிள்ளைக்கு கோமதி நாயகம், ஆறுமுகம், பிரம்ம நாயகம், இராமலிங்கம், சிவசுப்பிரமணியன் என்ற மணி என 5 ஆண் மக்களும், சரஸ்வதி என்ற பெண் மகளும் வாரிசுகள் என்றால் சரி தான். காந்திமதிநாத பிள்ளையின் வாரி'சு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். நான் பார்த்துள்ளேன். 2 ம் தபசில் சர்வே எண். 611/1 ல், 10 ஏக்கர் 7 செண்டு சம்மந்தமாக சிவசுப்பிரமணிய பிள்ளை மற்றும் காந்திமதிநாத பிள்ளை பெயர்களில் பட்டா எதுவும் பார்க்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.06.03 15:08:30 +0530

5) சண்முகம் பிள்ளை பெயரில் கூட்டுப் பட்டாவோ, தனிப்பட்டாவோ பார்த்துள்ளீர்களா என்றால் ஞாபகம் இல்லை. சண்முகம் பிள்ளை எப்போது இறந்தார் அவருக்கு எத்தனை வாரிசுகள் என்று சொல்ல இயலுமா என்றால் ஞாபகம் இல்லை. உங்கள் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சண்முகம் பிள்ளை என்பவருக்கு சிவசுப்பிரமணிய பிள்ளை என்ற மகன் உள்ளதாக கூறி உள்ளீர்கள். அதன் சம்மந்தமாக ஆவணம் எதுவும் பார்த்துள்ளீர்களா என்றால் ஞாபகம் இல்லை.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.06.03 15:08:36 +0530